
# திராவிடத்தால் வாழ்கிறோம்

984

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## 'மைனாரிட்டி' தி.மு.க.

மரு.எஸ்.ஏ.எஸ்.ஹபிசுல்லா

32

தி.மு.க.வுக்கும் சிறுபான்மையினருக்குமான உணர்வுபூர்வமான உறவையும் உரிமைச் செயல்பாடுகளையும் விவரிக்கும் தொடர்

# ஆயிரம்விளக்கின் அற்புத விளக்கு!



கழகத்தின் முன்னோடிகள் மொய்தீன் பிச்சை, சாதிக் பாட்சா, நாகூர் ஹனிபா வரிசையில், குடும்பத்தைவிட கலைஞரையும் கழகத்தையும் அதிகம் நேசித்த மற்றுமொரு சிறுபான்மைச் சமூக கழகக்காரர், ஆயிரம் விளக்கு உசேன். தனது இறுதி காலம்வரை, கலைஞரின் தொண்டர் என்று தன்னை அறிமுகம் செய்துகொண்டவர். அவருடைய கார் வந்தாலே 'உசேன் வாகனம் வருகிறது' என்று பொதுமக்களே கண்டுபிடித்துவிடுவார்கள். ஏனெனில், கழகத்தின் மீது கொண்டிருந்த பற்று காரணமாக கார் முழுவதும் கருப்பு - சிவப்பு வண்ணத்துக்கு மாற்றியிருந்தவர் உசேன்.

பள்ளியில் படிக்கும் காலத்தில், குடும்பத்துடன் ஹஜ் பயணம் செல்கையில், உசேன் அவர்களுக்கு அருகில் அமர்ந்து பயணிக்கும் வாய்ப்பு எனக்கு அமைந்தது. அப்போது, தமிழ்நாட்டு அரசியல் குறித்து நான் கூர்மையாக அறிந்திருக்கவில்லை என்றாலும், உசேன் அவர்கள் பேசிய வார்த்தைகள், இன்றும் என் நினைவில் இருக்கின்றன. என்னுடைய படிப்பு குறித்து மிகுந்த அக்கறையோடு விசாரித்து, இஸ்லாமிய சமூகத்தின் மீது கலைஞர் கொண்டிருந்த அக்கறை, செயல்படுத்திய திட்டங்களையெல்லாம் எனக்கு விளக்கினார். "தலைவர் எப்படியாவது இஸ்லாமியர்களுக்கான இடஒதுக்கீட்டுக்குத் தீர்வு கண்டுவிடுவார்; அது நடைமுறைக்கு வரும்போது, சிறுபான்மைச் சமூகத்தின் கல்வியில் பெரிய மாற்றம் வரும்" என்று அவர் எனக்குள் விதைத்த நம்பிக்கை, கல்வி மீது மட்டுமல்ல கலைஞர் மீதானதாகவும் பின்னாளில் உருவானது.

### இடஒதுக்கீடு மாற்றும்!

இஸ்லாமியரின் இடஒதுக்கீட்டு உரிமை குறித்து, அன்று உசேன் அவர்கள் பேசியது, பின்னாளில் கலைஞர் ஆட்சியில் உறுதியானது. அன்று அவர் புகட்டிய அரசியல்தான், என்போன்ற எண்ணற்ற இளைஞர்களுக்குப் பாடமாக அமைந்தது. இஸ்லாமிய இளைஞர்களை மட்டுமல்ல, சந்திக்கும் எவர் ஒருவரையும் கழகக் காவலர்களாக மாற்றிவிடும் ஆற்றல் கொண்டவர். கழகத் தலைமை நிலைய அலுவலகச் செயலாளர் அண்ணன் பூச்சி முருகன் அவர்கள், சமீபத்தில் உசேன் அவர்களின் நினைவு நாளில், எழுதிய பதிவொன்று அதற்கு நல்ல உதாரணம்.

"1984-ஆம் ஆண்டு, நான் வீட்டு வசதி வாரிய பணியில் சேர்ந்தேன். 1986-இல் நான் தபால் கிளார்க்காக இருந்த சமயம். பட்டினப்பாக்கம் வீட்டு வசதி வாரிய குடியிருப்பில் வாடகைக்குக் குடியிருந்த சாதிக் பாட்சா அண்ணன் வீட்டுக்கு வெள்ளையடிக்க, அனுமதி கேட்டு வந்திருந்தார், உசேன் அண்ணன். அப்போது, அவருடைய கைகளைப் பிடித்தவன்தான் நான். அவரின் கடைசி நிமிடம் வரை அந்தக் கரங்களை விடவே இல்லை. அந்தக் கரங்களை விட, ஒருபொழுதும் தோன்றியதும் இல்லை. வெள்ளையடிக்க அனுமதி கேட்டு வந்தவர், என் வாழ்க்கையை தி.மு.க.வின் கருப்பு சிவப்பாக மாற்றினார். அவருடன் இருந்தபோது நான் கற்றுக்கொண்ட கட்டுப்பாடும் ஒழுக்கமும்தான் என்னை இன்றும் வழிநடத்துகின்றன. இனியும் வழிநடத்தும். தொண்டனுடன் தொண்டனாகப் பணிபுரிவதில் அவருக்கு இணை அவர்தான்" என நீள்கிறது அந்தப் பதிவு.

### கலைஞரின் உற்றத் தோழன்!

எஸ்.ஏ.எம்.உசேன், காஞ்சிபுரம் மாவட்டம், ஒலிமுகமதுபேட்டையில் பிறந்தவர். அவர், சிறுவனாக இருக்கும்போதே அவரது குடும்பம் சென்னை ராயப்பேட்டையில் குடியேறிவிட்டது. சிறுவயதிலேயே கழகத்தில் இணைந்து செயல்பட்டுவந்த அவர், ஆயிரம்விளக்கு பகுதியில் வட்டச் செயலாளர் ஆனார். அதன்பிறகு, 'ஆயிரம்விளக்கு உசேன்' என்பது அவரது அடையாளமாக மாறிவிட்டது. கலைஞரை சந்திக்க வரும் தொண்டர்கள் யாராக இருந்தாலும், உசேன் முகத்தைப் பார்த்துவிட முடியும். ஏனெனில், அறிவாலயம், கலைஞரின் கோபாலபுரம் வீடு ஆகிய திசைகளில்தான் உசேனின் சைக்கிள் கண்ணை மூடிக்கொண்டு செல்லும். கலைஞரைப் பார்க்க அங்கு செல்லும் எவராக இருந்தாலும், அவர்கள் கண்களில் உசேன் பட்டுவிடுவார்.

> 2001- ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் திருவல்லிக்கேணி தொகுதியில் போட்டியிட வாய்ப்பு வழங்கி, சட்டமன்ற உறுப்பினராகவும் ஆக்கினார்.

கழகத்தின் மீதான பற்றும், களப்பணிகளில் அவர் காட்டிய ஆர்வமும் பகுதிச் செயலாளர், மாவட்ட துணைச் செயலாளர், கொள்கை பரப்பு இணைச் செயலாளர், தலைமை அலுவலகச் செயலாளர் என தி.மு.கழகத்தில் பல்வேறு பொறுப்புகளுக்கு அவரை உயர்த்தியது. தலைமை அலுவலகச் செயலாளராக உசேன் இருந்தபோது, நாள் ஒன்றுக்கு 18 மணி நேரம் அறிவாலயத்தில் இருப்பார். அண்ணா அறிவாலயத்தில், காலை 6 மணிக்கு கலைஞர் நடைபயிற்சி மேற்கொள்ள வரும்போது, கலைஞரை வரவேற்க உசேன் இருப்பார். காலை 11 மணிக்கு மீண்டும் கலைஞர் வரும்போதும் உசேன் இருப்பார். அப்படி என்றாவது ஒருநாள் உசேன் அங்கு வரவேற்க நிற்கவில்லை என்றால், "உசேனுக்கு என்ன ஆனது, உடல் நிலை சரியில்லையா? விசாரித்து வாருங்கள்" என்று வீட்டுக்கு ஆள் அனுப்பிவிடுவார் கலைஞர். அந்த அளவுக்கு கலைஞரின் ஆழ்மனதில் இடம்பிடித்தவர்.

முன்பே கூறியதுபோல, தொடக்கக் காலத்தில் எங்கு சென்றாலும் சைக்கிளில் செல்வார். அதனால், ஆயிரம்விளக்குப் பகுதி கழகத்தினர் நிதி திரட்டி, அவருக்கு ஸ்கூட்டர் ஒன்றை வாங்கித் தர ஏற்பாடு செய்தனர். தங்களது விருப்பத்தை கலைஞரிடம் சொல்லி, நிகழ்ச்சிக்கு அவரை அழைக்க, உடனே ஒப்புதல் தந்தார் கலைஞர். கிரீம்ஸ் சாலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வரவேற்புரையாற்றிய கழகத்தின் இன்றைய தலைவர், "அண்ணன் உசேன் அவர்கள் வேகமாகப் பணியாற்ற வேண்டுமென்பதற்காக நாங்கள் நிதி திரட்டி, இந்த ஸ்கூட்டரை வாங்கித் தருகிறோம்" என்றார். நிகழ்ச்சியில் பேசிய கலைஞர், "வேகமாகப் பணியாற்ற வேண்டுமென்பதற்காக, ஸ்கூட்டரில் வேகமாகச் செல்லக் கூடாது" என்று தனக்கே உரிய நகைச்சுவையுடன் அறிவுறுத்தி, ஸ்கூட்டரை வழங்கினார்.

உசேன் அவர்களின் பெருமைகள் பலவற்றை எடுத்துச்சொன்ன கலைஞர், "ஆயிரம்விளக்கின் அற்புத விளக்கு" என்று மனதிலிருந்து பாராட்டினார். கழகத்தின் அந்த அற்புத விளக்கான உசேன் அவர்களுக்கு, 2001- ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் திருவல்லிக்கேணி தொகுதியில் போட்டியிட வாய்ப்பு வழங்கி, சட்டமன்ற உறுப்பினராகவும் ஆக்கினார்.

...நீளும்

## மக்கள் பதிப்பில் தொல்காப்பியப் பூங்கா!




முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் எழுதிய நூல்களில், 'தொல்காப்பியப் பூங்கா' தமிழறிஞர்களால் வியப்புடன் பார்க்கப்பட்ட நூல்.

தொல்காப்பியத்துக்கு உரை எழுதிய பழைய உரை ஆசிரியர்கள் பலரும், அவரவர் காலத்து சமயத் தாக்கங்களுக்கு உட்பட்டே உரை எழுதி இருக்கின்றனர் என்பது தமிழ் ஆய்வாளர்களின் கருத்து. தவிர, பழந்தமிழ் நடையில் உள்ள இலக்கண நூல் என்பதால், இதனைக் கற்பதற்குப் பலரும் முன்வருவதில்லை. இந்த இரண்டு சவால்களையும் கடந்து, மக்கள் படிக்க விரும்பும் எளிய நடையில், படிப்பவர் ஆர்வத்தைத் தூண்டும் கதைக் குறிப்புகளுடன், வரலாற்று விளக்கங்களுடன் தொல்காப்பியப் பூங்காவை எழுதினார் கலைஞர்.

கலைஞர், இலக்கியப் புலமை கொண்டவர் மட்டுமல்ல; இலக்கணப் புலமையும் கொண்டவர் என்பதையும் உலகுக்கு அறிவித்த நூல். பிற உரையாசிரியர்களிடமிருந்து வேறுபட்டு, புது விளக்கம் அளித்ததுடன், 'தொல்காப்பியம் தொடங்குவது கடவுள் வாழ்த்துடன் அல்ல' என்பதையும் தனது உரையில் நிறுவினார். மிகுந்த வரவேற்பினைப் பெற்ற நூலினை மக்கள் பதிப்பாக ரூ.100 விலையில் வெளியிட்டுள்ளது திராவிடியன் ஸ்டாக் பதிப்பகம்.

நூலினைப் பெற 90927-87854 என்கிற எண்ணுக்கு அழைக்கலாம்.

## ஃப்ளாஷ்பேக்



### பெருநாளில் கிடைத்த பெருமகிழ்ச்சி!



வ.சாகுல் ஹமீது

2019-ஆம் ஆண்டு, ரம்ஜான் பெருநாளின் போது அறிவாலயத்தில், இன்றைய கழகத் தலைவர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை குடும்பத்துடன் சந்தித்து, மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டோம். எனது அப்பா வரிசைமுகமது, கட்சியின் மூத்த உறுப்பினர். அவர், பழைய நினைவுகளைத் தலைவரிடம் பகிர்ந்துகொண்டார். அம்மா ஷர்மதா பேகம், சகோதரர் முத்து இப்ராகிம் ஆகியோருடன் சென்று தலைவரைப் பார்த்தது பெருநாள் மகிழ்ச்சி மட்டுமல்ல; இன்றும் பெருமகிழ்ச்சி தருவது.

– வ.சாகுல் ஹமீது,
மாவட்டத் துணை ஒருங்கிணைப்பாளர்,
தகவல் தொழில்நுட்ப அணி,
சென்னை மேற்கு.

இது போன்ற அரிய புகைப்படங்களைச் சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### பொதுக்குழு மனவருத்தம்!

1961-ஆம் ஆண்டு, ஜனவரி 21 மற்றும் 22-ஆம் தேதிகளில் வேலூரில் பொதுக்குழுக் கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில், கழகத்தின் அவைத் தலைவர் பதவியையும் சாதாரண உறுப்பினர் தவிர்த்து, மற்றும் உள்ள பதவிகளையும் விட்டு விலகுவதாக ஈ.வெ.கி.சம்பத் அளித்த விலகல் கடிதத்தை, பொதுக்குழு மிகுந்த மனவருத்தத்துடன் ஏற்றுக்கொண்டது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131